**S.C. No.56/2020**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.3 திரு. சேகர், த/பெ. முனுசாமி**

**தேதி-14.07.2025**

**அ.சா.3 இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

வடமாதிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்திலிருந்து கண்ணனின் நிலம் உள்ள இடம் எவ்வளவு தொலைவு என்றால் 3 கி.மீ. தொலைவு. நான் சாமியை அழைத்துக் கொண்டு இரு சக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். எவ்வளவு நேரம் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் அரை மணி நேரம் இருக்கும். மருத்துவமனையில் இருந்த மருத்துவர்கள் என்ன நடந்தது, ஏது நடந்தது என்று சாமியிடம் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

சம்பவத்தை கேள்விப்பட்டு வடமாதிமங்கலம் அரசு ஆரம்ப சுகார நிலையத்தில் போலீசார் வந்திருந்தார்கள் என்றால் அவர்கள் வருவதற்குள், நாங்கள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டோம். நான் வரும் போது எங்கள் பின்னாலேயே வடமாதிமங்கலம் மருத்துவமனைக்குச் சென்ற காவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் வடமாதிமங்கலம் மருத்துவமனையிலிருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பே ஆம்புலன்சும் வந்துவிட்டது என்றாலும், அதிகாரிகளும் வந்துவிட்டார்கள் என்றாலும், அங்கேயே விசாரணையை தொடர்ந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

என்னிடம் விசாரணை செய்தார்கள், நான் நடந்த விவரத்தை சொன்னேன். சம்பவ இடத்திலேயே நான் சொன்னதை எழுதி கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். ஐயப்பன் என்பவர் கண்ணனுடன் வேலை செய்பவர் என்றால் சரிதான்.

கண்ணன், மகன் மற்றும் மனைவி ஆகியோர் நியாயம் கேட்க சென்ற போது ஐயப்பன் உடன் சென்றாரா என்றால் செல்லவில்லை, ஐயப்பன் அவருடைய வீட்டில் இருந்தார். தஞ்சியப்பன், அவருடைய மனைவி ஆகியோர் அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக போளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, களம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் கண்ணன் மற்றும் அ.சா.1 சாமி என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

நான் இந்த வழக்கிற்காக பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் என்னுடைய தங்கையின் கணவர் என்பதால், தங்கையின் மகன் கொடுத்த புகாருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.